நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

# ‘பல்கலைத் தென்றல்’ ஸ்ரீதர் பிச்சையப்பா

ஆழித்து முத்துக்கள் 21

பெப்ரவரி 20ந்திகதி, சனிக்கிழமை அதிகாலை அவுஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாளர் கானாபிரபா தொலைபேசியில் அழைத்து அந்தச்செய்தியைச் சொன்னபொழுது, மிகுந்த கவலையாகவிருந்தது. என்னுடன் தனது இளமைக்காலத்தில் இருந்தே அன்புடனும், உரிமையுடனும் பழகிய அந்த திறமையான கலைஞனான ஸ்ரீதர் பிச்சையப்பா தனது



47வது வயதிலேயே இறந்துவிட்டார் என்பதை என்மனம் நம்பமறுக்கின்றது.

இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை நாடகங்களிலே, சானாவின் நெறியாள்கையில் முக்கியநடிகராக நடித்துக்கொண்டிருந்த பிச்சையப்பாவின் மகனாகத்தான் எனக்கு முதலில் ஸ்ரீதரைத் தெரியும். தனது தகப்பனுடன் நாடகங்களில் நடிக்கின்றவர்களாகிய நான், ராமதாஸ், ராஜகோபால், செல்வசேகரன் ஆகியோரை உரிமையாக ‘மாமா’ என்று அழைத்துக்கொண்டு, வானொலி நிலையத்தில் எங்களை சந்திக்கும் சிறுவனாக என் நினைவில் நிற்கிறார்.

காலப்போக்கில் எங்களுடன் பலவானொலி நாடகங்களில் இணைந்து நடிக்கும்போது ஸ்ரீதரின் தனித்திறமை எங்களுக்கு தெரிய வந்தது. நான் எழுதிய பல வானொலி நாடகங்களில் ஸ்ரீதர் நடித்திருக்கிறார். சில நகைச்சுவைப்பாத்திரங்களை ஸ்ரீதரை மனதில் வைத்துக்கொண்டே நானும், ராமதாஸும் எழுதி அவரை நடிக்கவைத்தோம்.

ஸ்ரீதர் நல்லதொரு கவிஞனாகவும் விளங்கியதோடு, இனிமையாக பாடவும் வல்லவராக விளங்கினார். சஞ்சிகைகளுக்கான ஓவியங்களோடு, பல நூல்களுக்கு அட்டைப்படங்களும் வரைந்து கொடுத்த ஓவியராகவும் திறன்காட்டியவர். எழுத்தாளராகவும், இயக்குனராகவும் ஸ்ரீதரை இனம்கண்டோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவிற்கு வந்த கலைஞர்குழுவில் ஸ்ரீதரும் இணைந்து வந்தது எனக்கு மிகுந்த சந்தோசத்தை தந்தது. நான் எழுதி, இயக்கிய ‘கலாட்டாக்காரர்கள்’ என்ற நாடகத்தில் இந்தியாவிலிருந்து கனடாவிற்கு வரும் ஜோதிடராக அனாயாசமாக நடித்து பாராட்டுக்களைப்பெற்றதோடு, அதே மேடையில் வெகுசிறப்பாக திரைப்பாடல்களையும் பாடியதை பலர் மறந்திருக்கமாட்டார்கள்.

நண்பர் அப்துல்ஹமீட், பிரான்ஸ் எஸ்.கே.ராஜன் இருவரும் இணைந்து எண்பதுகளின் பிற் பகுதியில் இலங்கைத்தமிழ்க் கலைஞர்களையும் ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பித்து நிகழ்ச்சி செய்விக்கும் முனைப்பில் ஈடுபட்ட காலத்தில், ஸ்ரீதரும் கலைஞர் குழுக்களோடு சென்றிருக்கிறார்.

1963ம் ஆண்டு ஜுலை மாதம் 20ந்திகதி பிறந்தவர் ஸ்ரீதர் பிச்சையப்பா. தன் சொந்த வாழ்க்கையில் பலதுன்பங்களைச்சந்தித்த இந்தக்கலைஞன், வெடிகுண்டுவிபத்தில் ஒரு கண்ணில் பாதிப்படைந்தது பெரியசோகம். கலகலப்பும், குதூகலமுமாக வலம்வந்த இந்தக் கவிஞனின் அண்மைக்கால மெல்லிசைப்பாடல்களில் அந்தச்சோகத்தை அவதானித்திருக்கிறேன்.

சிறுவர்மலர் நிகழ்ச்சி மூலமாக தன்கலைப் பயணத்தை ஆரம்பித்த ஸ்ரீதர் கலையின் பலதுறைகளிலும் திறமைகாட்டிய ‘பல்கலைத் தென்றலாக’ பரிணமித்தார். அண்மைக்காலத்தில் மித்திரன் வாரமலரில் ‘கலாபவனம்’ என்ற தொடரை எழுதிவந்திருக்கிறார்.

கனடாவில் கலைப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வேளையில், ஸ்ரீதருக்கு அன்பளிப்பாக எதை கொடுப்பது என்று தெரியாமல், அவரிடமே கேட்டேன். வாசனைத் திரவியங்களோ, ஆடை, அணிகளோ ஸ்ரீதர் என்னிடம் கேட்கவில்லை. “மாமா... நான் ஓவியம் வரைவதற்கு நல்ல தூரிகைகள், வண்ணங்கள் வாங்கித்தாருங்கள்’’ என்று உரிமையுடன் கேட்டு வாங்கிப்போனார்.

இன்னும் எவ்வளவோ சாதிக்கக்கூடிய திறமையிருந்தும், ஸ்ரீதருக்கு காலம் மாத்திரம் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அதுதான் கவலையாகவிருக்கிறது.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும்

‘தாய்வீடு’

www.thaiveedu.com